# உறுதுணை

உடற் பயிற்சிக்கு இணையான வேலை என்னும் பொறுமையுடன் சரசு தன்வீட்டுக் காரியம் முழுவதையும் தானே செய்ய வரிந்து கட்டிக்கொண்டாள். வேலைக்காரி தேடும் படலத்தைக் கைவிட்டாள். வேறு வழி? எத்தனை பேரிடமோ சொல்லி வைத்தாள். பையனோ, சிறுமியோ, குமரியோ, கிழவியோ, யாராவது சிற்றாள் வந்தால் சரி என்று பார்த்தாள். கிடைக்கவில்லை. "யாரையும் இனி வலுவில் அழைக்கமாட்டேன்!" என்ற வீறாப்பு மேலிட்டது. பல்லைக் கடித்துக்கொண்டு வந்தாள்; தானே செய்து கொண்டாள். கிணற்று நீரை இறைக்கும் வேலையில் கிருஷ்ணனும் பங்கு ஏற்றான்.

வலது கையில் சற்று இறுகிப்பிடித்த பொன் வளையல்கள் இரண்டையும் சிரமப்பட்டுக் கழற்றி இடது கையில் அணிந்தாள். அடுத்த தெருப் பாட்டி வந்து விசாரித்தபோது "இந்தக் கை எஜமானி, இது வேலைக்காரி" என்று சொல்லி முறுவலித்தாள். "இது ஒரு நாகரீகமா? நீயும் ஆரம்பித்துவிட்டாயே!" என்று கேட்க நினைத்த பாட்டி, 'நீ சமர்த்து!' என மெச்சிலிட்டுப் போய்ச் சேர்ந்தாள்!

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு சரசுவிற்குப் பயம்பிடித்துக்கொண்டது. தனி வழி நடக்கத் துணிந்த நடக்கையிலே தன் நிழலையே கண்டு மருள்வதுபோல சரசு தன் மன மாற்றத்தைக் கண்டு மருண்டாள்!

"பாத்திரங்களைத் தேய்த்துத் துடைத்து அடுக்கி அழகு பார்த்துக் கொண்டிருந்தால் என் பாட்டும், படிப்பும், தையலும் என்னாவது? இவற்றில் ஏறவேண்டிய மெருகு அடுக்களையிலும், வீட்டு சிமெண்டுத் தரையிலும் ஏறினால் போதுமா? அறிவுக்கு வேலையில்லாத செயல்களில் ஒன்றிப்போவேன் போலிருக்கே!" என்று அஞ்சினாள். வீரம் பேசிவிட்டு முறையிடக் கூச்சமாயிருப்பினும், ஆதங்கம் சொல்லத்தூண்டிற்று; கணவனிடம் சொன்னாள். ஆனால் கிருஷ்ணன் ஏசவில்லை. "நானும் சொல்லியிருக்கிறேன், சிலரிடம்," என்று சொன்னான். இந்த மறுமொழி சரசுவின் கலையுணர்ச்சியைத் தூண்டிவிட்டது. அவளைப் போலவே அவள் கணவனும் கருதுகிறானே!

வாசலில் பிச்சைக்காரி கத்தினாள். வேலைக் சலிப்பில் சரசு சீறி விழுந்தாள். பத்துப் பாத்திரங்கள் அதிகம் குவிந்து கிடந்தன. முந்திய தினம் விருந்தாளியொருவர் வந்து போனதன் அடையாளம். பிச்சைக்காரியை விரட்டிவிட்டு உள்ளே வந்த சரசு, மிஞ்சிக் கிடந்த குழம்பு சாதத்தைப் பார்த்து நாக்கைக் கடித்துக்கொண்டாள். "உள்ளே வந்து பத்துப் பாத்திரம் தேய்த்துவிட்டு சாப்பிட்டுவிட்டுப்போ" என்று சொல்லியிருக்கலாம்! பிச்சைக்காரி பார்வைக்கு அப்படிப்பட்டவளாகத் தோன்றவில்லையே! வேலை கிடைக்கவில்லை என்று பிச்சை எடுக்கிறாளோ?

பாத்திரம் துலக்கிவிட்டு எழுந்த சமயம் வாசலில் ஒரு குரல் 'அம்மா தாயி!' என்று இரந்தது. தமிழ்க் குரலைக் கேட்டு சரசு குதுகுதுப்போடு வாசலுக்கு விரைந்தாள்.

அலங்கோலமில்லாத ஆடையுடுத்தி, வாரிப் பின்னிய செம்பட்டை மயிருடன் ஒரு சிறுமி நின்றிருந்தாள்.

"ஏ குட்டி, ஏனிப்படி பிச்சை எடுக்கிறே!" என்று கேட்டாள் சரசு.

"சோறு கிடைக்கமாட்டேங்குதே!"

"வேலை செய்தால் கிடைக்காதோ?"

"வேலை கிடைக்கலையே!"

"ஏன், கிடைக்கும்! தேடினால் கிடைக்கும்! எங்க வீட்டிலே வந்து செய்யறியா?"

"உம்"

"முன்னே செய்து பழக்கமுண்டா?"

"பட்டணத்துலே ஐயமாரு வீட்டிலே செய்திருக்கேன்"

"ஏன் அங்கிருந்து இங்கே வந்தீங்க? ஒரு பட்டாளம் தமிழங்க வந்துட்டீங்களே இந்த ஊருக்கு?"

"அங்கே அரிசி கிடைக்க மாட்டேங்குதே."

பத்து வயதுச் சிறுமியின் பேச்சைக் கேட்டு சரசு சிரித்தாள்.

"சரி, இப்போ சோறு இருக்கு, போடறேன். சாயங்காலம் வேலைக்கு வரயா?"

"உம், வரேன்".

"உன் பேர் என்ன?"

"கண்ணம்மா"

"இரு வரேன்" என்று சரசு உள்ளே திரும்பியபோது, சிறுமி, "அரிசி போடமாட்டீங்களா?" என்று கேட்டாள்.

"மாட்டேன். கொள்ளையாய் குழம்பு சாதமிருக்கு. அதைத்தான் போடுவேன். வேண்டாமா?"

"சரி போடுங்க," என்றாள் குட்டி.

'அரிசி போடவில்லை என்று குறை இவளுக்கு ஏன்? இராத்திரி செய்த குழம்பு மணக்கிறது; தின்ன வலிக்குமா?' என்று யோசித்தபடி போட்டுவிட்டு, "சாயங்காலம் வா" என்று சொல்லியனுப்பினாள்.

"ஆகட்டும்" என்று கூறிச்சென்ற கண்ணம்மா, அப்புறம் அந்தத் தெருமுனைகூட நுழையவில்லை!

** ** **

ஏமாற்றமும், சினமும், வருத்தமும் மனைவியைக் கவ்விக்கொண்டதைப் பார்த்த கிருஷ்ணன், "பிச்சை எடுத்து சம்பாதிப்பது தான் அதுகளுக்கு இஷ்டம்" என்றான்.

"வேலை கிடைப்பதில்லை என்றாளே!"

"அது சும்மா"

"நம்ம பக்கத்தில் அரிசி கிடைப்பதில்லை என்று வந்துவிட்டதாகச் சொல்கிறதுகள்!"

"அதுவும் பொய்! இப்போ அரிசிக் கட்டுப்பாடு கிடையாதே! அங்கே கள்தான் கிடைக்கிறதில்லை. அதனால் ஆண்பிள்ளைகள் இங்கே வந்துட்டான்கள் போலிருக்கு. ரிக்ஷா இழுத்து, கூலி செய்து சம்பாதித்து குடிக்கவும் குடிக்கிறான்கள். அவன்களோட குடும்பமும் வந்துவிடுகிறது. பிச்சை எடுக்கிறது; உடம்பு வணங்காமல் சம்பாதிக்கிற வழி பிச்சைத் தொழில்; வேலைக்கு வரக் கசக்கிறது" என்று ஆத்திரத்துடன் விளக்கின கிருஷ்ணன், புன்சிரிப்புடன், "இங்கேயும் மதுவிலக்கு வரப்போகிறது" என்றான்.

இந்தப் பேச்சு சரசுவை திகைக்கச் செய்தது. 'இவர்கள் நாடுவிட்டு நகர்ந்த காரணம் அரிசித்தட்டு இல்லை; வேலையின்மையுமில்லை' என்று நினைக்கையில் உள்ளங்கொதித்தது. சிறுமி கண்ணம்மாளின் பெயரையும் பேச்சையும் சொல்லிச் சிரித்த சரசு, இப்போது அவளை நினைத்தாலே எரிச்சலடைந்தாள். சொருக்குக் கொண்டைக்காரிகள் பிச்சைக்கு வந்தால் கதவை அடைத்தாள். தமிழ்நாட்டிற்கே உரிய இசைச் செல்வத்தின் இரசனையுடன் பாடிக்கொண்டு பெருங்குரல் எழுப்பிய பிச்சைக்காரரையும் ஓட்டிவிட்டாள், காதுகளை அடைத்துக்கொண்டு!

** ** **

அடுத்த தெருப் பாட்டி, "நீயும் பத்துப் பாத்திரம் தேய்க்கலாச்சே!" என்று அங்கலாய்த்தாள்.

"உடல் வருத்திச் சாப்பிட்டால் பெருமைதான்! இதோ, நம்ம பக்கத்திலிருந்து படையெடுத்து வந்திருக்கிற பிச்சைக்காரக் கூட்டம் பாருங்கள். நம்ம மானம் வாங்குகிறது!" என்று ஆரம்பித்து சரசு, கண்ணம்மாவை வேலைக்கு அழைத்த வயிற்றெரிச்சலை வேடிக்கையாகவே சொன்னாள்.

"அப்படிப்பட்டதுகளை நீ அழைக்கவும் வேண்டாம். கையும், கண்ணும் எப்படியிருக்குமோ? எதையாவது பறிகொடுத்துவிட்டு நிற்காதே!" என்று பாட்டி போதனை செய்துவிட்டாள் சரசு வாயடைத்துப் போனாள்.

பின்னர் ஒருநாள் பாட்டி, "எவளும் கிடைக்கவில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லையே! நான் தேடப் போகவில்லை. நீங்கள் ஒருத்தியை நல்லவளாகப் பார்த்து அனுப்புவீர்களா என்று பார்க்கிறேன். என்னைவிட நீங்கள் வருத்தப்படுகிறீர்களே, என்னைப் பார்த்து," என்று அரைகுறையாக சரசு அலுப்பும் சிரிப்பும் வெளியிட்டாள்.

"தமிழச்சியொருத்தி இருக்கிறாள்; எங்கள் தெருவில் இரண்டு குஜராத்தி வீடுகளில் செய்கிறாள். அவளைக் கேட்டேன். மதராஸி வீட்டில் செய்யமாட்டாளாம் - என்ன செய்கிறது?" என்றாள் பாட்டி.

"பேஷ்! எனக்கு எப்படி அதுகளைக் கண்டால் கோபம் வருகிறதோ, அதே மாதிரி அவளுக்கும் பிடிக்கவில்லையா? சரி, வேண்டாம்," என்றாள் சரசு. "சொல்லிப் பார்க்கிறேன் மறுபடியும்" என்று பாட்டி சொன்னபோது "உம்" என்று பதிலளித்தாள்.

மறுநாள் முற்பகல் ஒரு இளம்பெண், "வரச் சொன்னீர்களாம்!" என்று சொன்னவண்ணம் வந்து நின்றாள்.

"மதராஸிக்காரங்க வீட்டில் வேலை செய்யமாட்டேன் என்று சொன்ன சின்னியா நீ?" என்று எடுத்த எடுப்பிலே கேட்டாள் சரசு.

"ஆமாங்க எனக்குப் பயம். வேறு யாராவது ஏதாவது சொன்னால் எனக்கு வருத்தமாப் போகாது ... " என்று இழுத்தாள் சின்னி.

சொருக்குக் கொண்டை போடாமல் பின்னலிட்ட சடையுடன் வந்த இந்தப் பெண்ணைப் பார்த்த பிறகு, தன் கருத்தில் மாறுதல் புகுந்ததோ என சரசுவுக்குத் தோன்றியது. "வேலைக்காரி தேவை" என்ற மனநிலையும் சேர்ந்து கொண்டது.

"வந்து செய்கிறதானால் வா. நான் அனாவசியமாகப் பேசி வருத்தப்படுத்துகிற வழக்கமில்லை," என்று சொல்லிவிட்டு வேலை விவரமும் சம்பள மாமூலும் தெரிவித்துவிட்டாள்.

"வந்து செய்துட்டுப் போறேன்," என்று ஒப்புக்கொண்டு போனாள் அவள்.

சின்னி வேலைக்காரியாக வந்ததனால் சரசு சந்தோஷப்பட முடியவில்லை. "செய்கிறாளா?" என்று பாட்டி கேட்டபோது தன் கவலையைச் சொன்னாள். "கண்ணும் கையும் எப்படியிருக்குமோ என்று சொல்லி பயமுறுத்திவிட்டீர்கள்!" என்றாள்.

பாட்டியோ, "உன் ஜாக்கிரதையும் வேண்டுமம்மா" என்று பொறுப்பை மிகைப்படுத்திவிட்டாள்.

வந்த வேலைக்காரியோ, புகுந்த மறு நேரம் முதல் பஞ்சப்பாட்டுப் பாடினாள். "வயிற்றுக்குத் தின்றால் உடம்புக்குத் துணி வாங்க முடியல்லே. துணி உடுத்தினால், வயிற்றுக்குப் போதாது" என்று பொழுதுக்கு இரண்டு தடவை சொல்லிப் போனாள். சரசு கலங்கினாள். தான் உடுத்தும் புடவைகளும், அடுக்கியிருக்கும் பாத்திரம், பண்டங்களும் தன் வீட்டின் அலங்காரத் தோற்றமும் சின்னியின் வயிற்றெரிச்சலைக் கிளப்பி, தன் உடமைகளுக்கு உலை வைக்குமோ என்று அஞ்சினாள். இல்லாக் கொடுமை நல்ல பண்புகளையும் சுகுணங்களையும்கூடச் சூறையாடிவிடுமே!

"புருஷனுக்கு என்ன வேலை?" என்று சரசு கேட்டாள்.

"சிமிண்டு கம்பெனியிலே தண்ணீர் இறைக்கிற வேலை; ரொம்ப கஷ்டம்" என்றாள் சின்னி.

"உங்களைவிட கஷ்டப்படுகிறவர்கள் எத்தனை பேர்? அதை எண்ணி திருப்தியாயிருக்கணும். ரிக் ஷா இழுத்து சம்பாதித்து குடித்துவிடுகிறான்கள். பெண் ஜாதி பிச்சையெடுக்கப் போகிறாள். அப்படியெல்லாம் உன் வீட்டில் இல்லையே!" என்றாள் சரசு நாசூக்காக, அவள் கணவன் குடிகாரனா என்று அறியத்தான்!

"ஆமாம்மா! ரொம்ப ஜனங்க கஷ்டப்படுது. நாங்களும் ரொம்ப கஷ்டப்பட்டுட்டோம். அந்தக் கஷ்டங்களை நினைச்சாலே பயமாயிருக்குது" என்றாள் சின்னி.

"என்ன கஷ்டங்கள்?" என்று கேட்க வாயெழும்பவில்லை சரசுவிற்கு!

ஒருநாள் அடுத்த வீட்டுத் தெலுங்குப் பெண் சரசுவின் தேன் குழல் பிடியைக் கொணர்ந்து வைத்துச் சென்றாள். சரசு அதை உள்ளே எடுத்து வைத்தபோது, சின்னி,"என்னிடம் ஒண்ணு இருக்குது. அதைக் கடையிலே எடுத்துக்கமாட்டேங்கிறாங்கோ" என்றாள்.

திருட்டுப் பொருளோ என்ற பதட்டமுடன் சரசு "ஏன்?" என்றாள்.

"ஏன்னா என்னா சொல்றது? அவுங்களுக்கு அது வேணாம். எங்களுக்கும் உபயோகமில்லாமல் கிடக்குது வீட்டிலே," என்று பதிலளித்தாள்.

உண்டான தடுமாற்றத்தில் சரசுவின் நா எழவில்லை, கேள்விமாரி பொழிவதற்கு.

சற்றுப் பொறுத்து, "சரி, உன் வேலையை முடித்துப்போனால் நான் கதவைச் சாத்திக்கொண்டு ஸ்னானத்துக்கு வருவேன்," என்று துரிதப்படுத்தி சின்னியை அனுப்பிவிட்டுப் பெருமூச்செரித்தாள்!

தோன்றிய சந்தேகத்தைக் கணவனிடம் சரசு சொல்லவில்லை. சொல்லத் தயக்கமுண்டாவது ஏன் என்பதும் அவளுக்கு விளங்கவில்லை.

இன்னொரு நாள் பால் கொட்டிப்போயிற்று. "இதைக் கொண்டுபோய் வீட்டில் கலந்து குடி; சர்க்கரை போட்டிருக்கிறேன், அந்தக் கிண்ணத்திலே ஊற்றி எடுத்துப் போ," என்று சொல்லி ஒரு வெள்ளி டம்ளரோடு காபி டிகாக்ஷனைக் கொணர்ந்து வைத்தாள் சரசு. அவளுடைய காப்பிக்குப் போடும் பாலும், சர்க்கரையும் மாதம் மூன்று ரூபாய்க்குக் குறையாது என்பதும் சின்னிக்குத் தெரியட்டுமே என்ற எண்ணம்.

"இப்படியே எடுத்திட்டுப் போறேன்," என்றாள் சின்னி.

"வேண்டாம்; டம்ளரைத் தேய்த்து வை. கிண்ணத்தில் ஊற்றிக்கொள்," என்றாள் சரசு.

"இப்படியே கொண்டுபோனால் என்ன? சாயங்காலம் கொணந்திடறேன்," என்று சின்னி சொல்லவே, சரசு குரலில் கடுமையுடன், "வெள்ளி டம்ளரை வீட்டுக்குத் தரமாட்டேன். நான் சொன்னபடி செய்," என்றாள்.

சின்னி அப்படியே செய்துவிட்டுப் போனாள்.

"இது அப்பாவித்தனமா, சாமர்த்தியமா, தெரியவில்லை. வீட்டில் கெட்டுப்போச்சு என்றால் என்ன செய்கிறது? ரொம்ப அவஸ்தையாயிருக்கு," என்று அடுத்தவீட்டு தெலுங்கு மாமியிடம் சொல்லிக்கொண்டாள் சரசு. பிறகு பேச்சுப் போக்கில் "தேன்குழல் பிடி இருக்கிறதாம். உங்களுக்கு அவசியமானால் வாங்கிக்கொள்ளலாமே என்ற எண்ணம் போலிருக்கு அவளுக்கு," என்று சொன்னாள்,

"உங்களுடையதை அடிக்கடி எடுத்து வருகிறேன். உங்களுக்கு அவஸ்தையாயிருக்கு போலிருக்கு," என்று சிரித்தாள் தெலுங்கு மாமி.

அசட்டுச் சிரிப்புடன் "அப்படி இல்லை," என்றாள் சரசு.

"விலை கேளுங்கள். வாங்கினால் போச்சு, " என்று சொன்னாள் தெலுங்கு மாமி.

மறுநாளே சரசு சின்னியைக்கேட்டாள், “அஞ்சு ரூபா கொடுத்து வாங்கிட்டு வந்தாரு. இதே நம்மூரிலே பித்தளையிலே கிடைக்கும். இது வெறும் இரும்பு. அஞ்சு ரூபா கொட்டிட்டாரு; அது உள்ளே கிடக்குது, துருவேறிக்கிட்டு, ” என்றாள் சின்னி.

“அப்படி வாங்காவிட்டால் என்ன?” என்று கேட்கத் துடித்த சரசு, “அத்தனை கொடுத்து வாங்கிக்கமாட்டாங்க. என்னுடையது இரண்டு ரூபாய்தான்னு தெரியும்,” என்று சொல்லிவிட்டு நகர்ந்துகொண்டாள்.

பலவித சிந்தனைகள் சுழன்றன. கவலை, கோபத்தோடு வளர்ந்தது. முரடனாகத் தோற்றமளிக்கும் பேர்வழி நடுவழியில் துணை சேர்ந்து தோளோடு தோள் நடந்து வந்தால் தைரியப் படுவதா? அல்லது தென்பு பெறுவதா?

இரண்டு நாட்களுக்கு முன்புதான் ‘காலையில் பண்ணின பொங்கல்’ என்று சொல்லி இலையிட்டுக் கொடுத்தபோது, “நல்லாயிருக்குமா?” என்று கேட்டாள் சின்னி. “எலி உபத்திரவம். அரிசி வாங்கிப்போட டப்பா தரீங்களா?” என்று கேட்டாள். சரசு காட்டின மண்ணெணெய் டப்பா அளவு போதாது என்று அதைவிட அரைப்பங்கு பெரிதான டப்பாவை கொண்டுசென்றாள்.

இதை நினைத்துப் பார்த்தாள் சரசு.

“எங்கிருந்து வரும் பணம், துணி வாங்க? வயிற்றை கட்டாவிட்டாலும் நாக்கைக் கட்டிவைக்கணும். என்னிடம் இப்பவே புடவைக்கு அடிபோடுகிறாள். தேன் குழற்பிடி ஐந்து ரூபாய்க்கு வாங்கினாளாம்,” என்று பொறுமினாள்.

“இவளுக்கும் எனக்கும் சரிப்பட்டு வராது,” என்று சரசுவுக்குத் தோன்றிவிட்டது. இப்படியே சில நாட்கள் கடந்தன.

** ** **

ஒரு நாள் சின்னி வழக்கத்தைவிடத் தாமதமாக வந்தாள். “ஏன் நாழி? வேண்டாம் போ!” என்று சொல்லிவிடலாமா என்று கணநேரத் துடிப்பு உண்டாயிற்று. “இவ்வளவு நேரமானால் எப்படியம்மா? வீடுகிடக்கிற கிடப்புப் பார்!” என்றாள் சரசு.

“என்னம்மா செய்யறது? கொஞ்சம் அப்படி இப்படி ஆனாலும் நீங்க பார்க்கலாமா? அசலூர்க்காரங்க மனசு இளகாட்டாலும் பொருந்தும். எங்க கஷ்டம் நீங்க பார்க்கணும். உங்க சௌகரியம் நான் பார்க்கவேணும் இல்லையா? இன்னிக்கு நேரமாயிட்டுது,” என்று பணிவாக பதிலளித்தாள்.

பேசவில்லை சரசு. வேலைகள் செய்துகொண்டிருந்த சின்னியும் நெடுநேரம் பேசவில்லை. சரசு காப்பிக் கொணர்ந்து வைத்தபோது, சின்னி “நான் காப்பி குடிக்கிறேன், அவருக்கு சாயாதான் கிடைக்குது,” என்றாள்.

‘நாக்கு நீளம்,’ என்ற எண்ணமுடன் சரசு ‘உம்’ என்றாள்.

“ராத்திரி அவரும் நானும் சண்டை போட்டுகிட்டோம்,” என்றாள் சின்னி.

“ஏன்?” என்று சரசுவின் கேள்வி நழுவிற்று.

“இந்த மாசம் இரண்டு வீட்டு சம்பளமும் போட்டு புடவை ரவிக்கை எடுக்கிறேன்னு சொன்னேன். சண்டைக்கு வந்துட்டாரு. ‘சட்டை இல்லை, வேட்டியில்லை, புடவையா கேட்கிறே,’ என்றாரு. நான் ஒண்ணு சொல்ல, அவரு ஒண்ணு பேச சண்டை பெரிசாப் போச்சு. காலையிலே சாயா பண்ணிக்குடித்தேன். ‘குடிக்கமாட்டே’ன்னு பிணங்கிக்கிட்டு படுத்தினாரு. அவரை அனுப்பிச்சுட்டு வர நாழியாயிடுத்து.”

“ஓஹோ, அவ்வளவு கோபமா? உன் சம்பளம் தானேடி?”

“அதுதானங்க கேட்டேன், கோவம். ‘அஞ்சு ரூபா போட்டுவாங்கின முறுக்குப்பிடி சும்மா கிடக்கு, நீ வேலைக்குப் போற பவிசு அப்படி இப்படீன்’னாரு”.

“உம், புடவை வாங்கிக்கொள்ளவேண்டாம் நீ. தினமும் கால்படி எண்ணெய் வைத்து பணியாரம் பண்ணிப்போடு,” என்று தாக்கினாள் சரசு.

இந்த எதிர்ப்பின் உட்பொருள் சின்னிக்கு விளங்கவில்லை, விளங்க முடியாது.

“எங்கேம்மா நேரமிருக்கு? மூணுவீட்டு வேலை; இரண்டு வேளை வந்து போகிறேன். அப்புறம் என் வீட்டு வேலை. காலையிலே சாயா பண்ணக்கூட அவசரம். முறுக்கு சுட்டு விற்கவா நேரமிருக்கு? எங்கேயும் வேலை கிடைக்கலேன்னா முறுக்குச் சுடுவோம், கடலை வறுப்போம், பொரி பொரிப்போம். ஏதோ செய்வோம். இப்போ முடியுங்களா?"

"ஆமாம், ஆமாம்" என்று ஆமோதித்தாள் சரசு; வேறு வழி?

"வேலை செய்து பாடுபட்டுப் பணம் பண்ணி மானமாக வாழ்வோம்!" என்று முழக்கும் தொனியைக் கேட்டு சரசு சொக்கிப் போனாள்.

•• •• ••

சின்னியிடம் நம்பிக்கைப் பிறந்தது; அன்பும் உண்டாயிற்று. மனத் தெளிவுடன் சரசு எஜமானி ஸ்தானத்தில் பணிகள் ஏற்றாள். சின்னியும் உவந்து செய்தாள். இதற்கும் ஒரு சோதனை வந்தது. வேலையைச் செய்துவிட்டுப் படியிறங்கிப்போன சின்னியைப் பார்த்துக்கொண்டே சரசுவின் வீட்டு வாசற்படி ஏறினாள் ஒரு பெண்மணி.

"உங்கள் வீட்டு வேலைக்காரியா என்ன?" என்று கேட்டாள் சரசுவை.

"ஆமாம்; இத்தனை நாளும் இல்லாத புது வழக்கமாக ஒரு தமிழச்சி வந்து செய்கிறாள்" என்று புன்னகைத்தாள் சரசு.

"இவளை எங்கே பிடித்தாய்? பிச்சைன்னா எடுத்துக்கொண்டிருந்தாள் போலிருக்கு! ஒரு நொண்டியும், இவளுமாய் வருவார்களே எங்கள் நயாபஜார் பக்கம்! நான் பார்த்திருக்கிறேனே!" என்றாள் அந்த மாது.

கொஞ்சம் திடுக்கிட்டாள் சரசு. சமாளித்துக்கொண்டாள் உடனே. "'வேலைக்குப் போ, பிச்சையெடுக்க வராதே' என்று சிலசமயம் விரட்டுகிறோமே? 'வேலைகொடுக்க மாட்டேன், பிச்சை எடுத்துப் பிழை' என்று என்னமாகச் சொல்கிறது?" என்று கேட்டாள்.

"எனக்குத் தெரிந்ததைச் சொல்ல வேண்டியது என் கடமையம்மா, சொன்னேன். அப்புறம் உன் பாடு," என்று ஒரு புன்னகையை சிரமப்பட்டுக் காட்டினாள் வந்த பெண்மணி. அவள் கருத்தும் நியாயந்தானே!

சரசுவின் மனச்சாந்தி கெட்டது. சின்னியைப் பற்றித் தோன்றியிருந்த சஞ்சலமும், அது அகன்ற விந்தையும் கணவனிடம் சொல்லிச் சிரித்து மகிழ்ந்திருந்த சரசு 'கடவுளே' என அயர்ந்தாள்.

"'முறுக்குச் சுடுவோம், கடலை வறுப்போம்' என்று பேசின சின்னி! 'நீ பிச்சைக்காரியாக நொண்டியொருவனோடு சுற்றித் திரிந்தாயாமே! உன் உழைப்புப் பெருமை எங்கே ஓடியொளிந்திருந்தது?'" என்று சின்னியை விசாரிப்பது எங்ஙனம்?

வழி புலப்படவில்லை. நெருங்கிப் பழகிப் பேசி சின்னியின் வாய்மொழி மூலம் கண்டுபிடிக்க வேண்டும்! சரசு முனைந்தாள். கனிவுடன் கேள்விகள் கேட்டாள். மறுமொழி செவியுற்றாள். சரளமாகப் பழகினாள். எஜமானியின் சுமூகம் கண்டு சின்னிக்கும் உற்சாகம் ஊறிற்று. பழங்கதைகள் சில சொன்னாள். ஆனால் நொண்டியுடன் பிச்சைக்கு அலைந்த படலம் மட்டும் வரவில்லை!

"இத்தனை நாள் கேட்காத கேள்வி ஒன்று கேட்பேன். பதில் சொல்லணும்!" என்று சிரித்தாள் சரசு.

"என்னங்க அது?"

"மதராஸிக்காரங்க வீடுகளில் வேலை செய்ய மாட்டேன் அப்படீன்னு நீ நினைச்ச காரணம் என்ன? அதைச் சொல்லு பார்க்கலாம்," என்றாள் சரசு.

"அதுவா? சொன்னால் சிரிக்க மாட்டீங்கம்மா! அவரு காலிலே கோடாலி விழுந்து சதை புரண்டு நல்ல காயம்பட்டுது. ஆஸ்பத்திரியிலே இரண்டு மாசம் கிடந்தாரு. வேலையுமில்லே. இந்தக் கஷ்டத்திலே என் மகன் வேறே உயிரை விட்டுடுத்து. எனக்கு மனசு சரியில்லே. பிச்சை எடுத்துக்கிட்டே நம்ம தமிழங்க யாரையானும் கண்டுக்கிட்டு வேலை கேட்கலாம், மனசு இளகுவாங்க அப்படீன்னு அலைஞ்சோம். அவுங்களுக்கென்ன, போய் வான்னுட்டாங்க. அதுக்குக்கூட வருத்தப்படமாட்டோம். 'ஜாவ் ஜாவ் சலே ஜாவ்' அப்படீன்னு தான் பேசுவாங்க. நம்ம பாஷை பேசமாட்டாங்க. உறவு கொண்டாட வந்திடுவோம்னு பயம். நாங்க கோலம் போட்ட வாசற்படியாப் பார்த்துத்தான், ஆவலாக் கூப்புடுவோம். நம்ம பேச்சுப்பேசறவங்களைப் பார்ப்போமேன்னுட்டு! அவுங்களானா அந்நியங்கமாதிரி 'கிட்ட அண்டாதே'ன்னு கதவைத் தாளிடுவாங்க. ஐயோம்மா, இந்த சிமிண்டு கம்பெனி வேலை கிடைக்கிற மட்டும் ரொம்பத் திண்டாடிப்புட்டோம். நல்ல காலம், கால் ஊனம் ஆகல்லே. கையும் உடம்பும் நல்லாருக்கு; வயிறு நிரம்புது" என்றாள் சின்னி.

"இதுவா காரணம்?" என்ற திகைப்பினூடே சரசுவின் ஒரே ஒரு சந்தேகம் எட்டிப் பார்த்தது - மின் விசிறியின் காற்றோடு எழும் சுருதிச் சத்தம் புலன்களுக்கு ஓய்ச்சல் கொடுப்பது போல, அவளுக்கு அந்த ஐயம் அயர்வூட்டியது.

"கை நீட்டி பிச்சை எடுப்பானேன்?.... முறுக்குச்சுட்டு விற்கிறதுதானே?" என்று கேட்டுவிட்டாள்.

"அதான் சொன்னேனேம்மா. நாலு மனுஷங்களைக் கண்டு வேலை கேட்போமேன்னுதான் அலைஞ்சோம், கால் வலிக்க. முறுக்குச் சுட்டு விற்க இடமுமில்லை; நேரமும் இல்லை. எனக்கு இஷ்டமும் இல்லே. சொன்னேனே - பிள்ளை செத்துப் போச்சுன்னு, அது உயிரோடிருந்த போது பணியாரம் சுட்டு வித்துத்தான் அவுருக்கு ஆஸ்பத்திரியிலே போய்ப் பார்பேன். என் மகன் முறுக்குக் கேட்டுக்கிட்டே இருக்கும். ஒரு தடவை இரண்டு தடவை தருவேன். சதா தந்துகிட்டிருக்கக் கட்டுமா? தரமாட்டேன். ஒருநாள் காய்ச்சல் வந்தது. முறுக்குக் கேட்டது; தரல்லே, அப்புறம் இறந்து போச்சு. அதனாலே முறுக்குச் சுடவே அப்போ மனசு வரல்லே. இப்பக்கூட..... அவுரு சொல்றாரு...." திடீரென்று ஒரு புன்னகை ஒளி சின்னியின் முகத்தில் மின்னலாக வந்து மறைந்தது.

"அவுரு என்ன சொல்றாரு?" என்று சரசு இடக்காகக் கேட்டாள்.

"'இன்னும் ரெண்டு மூணுமாசம் போனா குஜராத்தி வீடுங்களிலே வேலையை விட்டுடு; நம்ப அம்மாளண்டை மட்டும் வேலை செய்துட்டு மத்த நேரம் வீட்டிலே பணியாரக் கடை போட்டுக் குந்திடு,' அப்படீங்கறாரு. எனக்கு மனது சம்மதப்படாதம்மா. இப்போ வந்திருக்கிற குழந்தையினாலே எனக்கு அந்த மகன் நினைப்பு ரொம்ப வருது. முறுக்குச்சுடத் தொடங்கினால் இன்னும் ரொம்ப வருத்தமாகப் போகும். ஆம்புளைகளுக்கு இதெல்லாம் எங்கே விளங்குது?" என்று சின்னி உணர்ச்சி வசப்பட்டு மொழிந்தாள்.

"ஆமாம், நிஜந்தான்" என்று மட்டும் சொல்லிவிட்டு எழுந்தாள் சரசு.

*******

பெண்ணாகப் பிறந்து, மனைவியாக வாழும் சரசுவுக்கு மட்டும் என்ன தெரிந்துவிட்டது?

சரசு தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள்!

கணவனும், தானுமாக நடக்கும் இல்லறப் பாதையிலே ஓர் மதலையின் துணையும், அன்புறவும் வேண்டும் என்ற எண்ணம் சரசுவுக்கு வந்தது இதுதான் முதல் அனுபவம்!

"குழந்தையின் துணை வேண்டும்!" என்று சொன்னால் கிருஷ்ணன் சிரிப்பானே!

அவன் சிரிப்பு தென்றல்தான். தழுவி உவகையூட்டும் மென் காற்றுதான் அவன் அன்பு. ஆனால் - மணம் வீசும் மலர்களின் வாடையைக் கொணரும் பூங்காற்று அன்றோ மதலையின் அன்பு?

மனக் கிளர்ச்சியைக் கணவனோடு பகிர்ந்துகொள்ள விழைந்தாள் சரசு. "கஷ்டப்பட்டவள் என்பதினாலேயே சந்தேகித்தேன் - கண்றாவி!" என்று நொந்தாள்.

"கஷ்டப்படுகிறவர்கள் நேர்மையுடையவர்களாச்சே!" என்று அலக்காகச் சிரித்தான் கிருஷ்ணன்.

"அடாடா, முன்னமே இந்த வார்த்தை செவியுற முடியாமல் என் நா பின்னுக்கிழுத்ததே! நானும் பார்க்கிறேன், நீங்கள் எது சொன்னாலும் ரொம்பப் பதிகிறது மனதில். இனி எந்த சஞ்சலம் வந்தாலும் உடனே வந்து முறையிடப் போகிறேன். உங்கள் துணை எனக்கு வேண்டியிருக்கு" என்று சொல்லிவிட்டு சரசு ஓடியொளிந்தாள்.

சின்னியின் சேவை, மின்சார விசிறியின் காற்று போல விலைக்குக் கிடைக்கிறது. இந்த மின் காற்றுதான் பூங்காற்றின் அருமையை உணர்த்தியது என்பதை சரசு சொல்லவில்லை ஓரக் கண்ணால் சின்னியைப் பார்த்துப் பார்த்து உணர்த்தினாள்.

**********

(சுதேசமித்திரன், அக்டோபர் 10, 1954)